1990 மே 7

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தபடியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப் படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS